# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C.249/2025 | Date | : 02.02.2026 |
| Deposition of Witness for | : அ.சா.1 | Taluk | : |
| Name | : செல்லகுமார் | Calling | : |
| Father Name | : நல்லமுத்து | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 02.02.2026.

(எதிரி ஆஜர்).

**அரசு தரப்பு முதல் விசாரணை :**

1) நான் தற்போது சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், ஆவாரம்பாளையத்தில் வசித்து லாரி ஒர்க் ஷாப்பில் வேலை செய்து வருகிறேன். கடந்த 06-10-2024 ம் தேதி, மாலை சுமார் 06.00 மணியளவில் சங்ககிரி சந்தைபேட்டையில் காய்கறி வாங்குவதற்காக எனது தந்தையின் Splendor இருசக்கர வாகனத்தில் வந்தேன். இருசக்கர வாகனத்தை சந்தைபேட்டை, செல்லியம்மன் கோவில் எதிரே நிறுத்திவிட்டு, காய்கறி வாங்கிவிட்டு வந்துபார்த்தபோது எனது இருசக்கர வாகனத்தை காணவில்லை.

2) நான் அருகில் இருந்தவர்களை விசாரித்தபோது சற்று முன்பு தான் சுமார் 30 வயது மதிக்கத்தக்க நபர் ஒருவர் அந்த வண்டியை எடுத்து சென்றதாக கூறினார்கள். பின்னர், நான் அக்கம் பக்கம் தேடிப்பார்த்தும் கிடைக்கவில்லை. லாரியை டெலிவரி செய்வதற்காக நான் சென்னைக்கு அருகில் உள்ள ஒரு

ஊருக்கு சென்றுவிட்டேன். பின்னர், கடந்த 11-10-2024 ம் தேதியன்று சங்ககிரி காவல் நிலையத்தில் புகார் ஒன்று கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **(புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர், ஒரு வாரம் கழித்து போலிசார் என்னை தொடர்பு கொண்டு இருசக்கர வாகனம் கிடைத்துவிட்டதாகவும், அது திருச்செங்கோடு ஊரக காவல் நிலையத்தில் இருப்பதாகவும் கூறினார்கள்.

3) நான் அங்கு சென்று எனது இருசக்கர வாகனத்தை அடையாளம் காட்டினேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள இருசக்கர வாகனம் என்னுடையது தான் **(இருசக்கர வாகனம் அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**குறுக்கு விசாரணை** :-

சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய எதிரி தரப்பிற்கு வாய்ப்பளித்தும் சாட்சியை குறுக்கு விசாரணை செய்யவில்லை.

Sd/-S.Sathiya,
Sd/-Sellakumar Judicial Magistrate No.1,
Sankari.

<u>DEPOSITION OF WITNESS</u>

(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C.249/2025 | Date | : 02.02.2026 |
| Deposition of Witness for | : அ.சா.2 | Taluk | : |
| Name | : பூபதி | Calling | : |
| Father Name | : ரவி | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 02.02.2026.

<u>(எதிரி ஆஜர்).</u>

**<u>அரசு தரப்பு முதல் விசாரணை :</u>**

1) நான் தற்போது சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், சின்னாகவுண்டனூர், கோபாலனூரில் வசித்து லாரி ஒர்க் ஷாப்பில் வேலை செய்து வருகிறேன். கடந்த 06-10-2024 ம் தேதி, மாலை சுமார் 06.00 மணியளவில் சங்ககிரி சந்தைபேட்டையில் காய்கறி வாங்குவதற்காக சென்றேன். அப்போது, செல்லக்குமார் என்பவர் அவரது இருசக்கர வாகனம் காணாமல் போய்விட்டதாக தேடிக்கொண்டிருந்தார். நானும் தேடினேன்.

2) அப்போது, அருகில் இருந்தவர்கள் சுமார் சுமார் 30 வயது மதிக்கத்தக்க நபர் ஒருவர் அந்த வண்டியை எடுத்து சென்றதாக கூறினார்கள். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**<u>குறுக்கு விசாரணை</u>** :-

சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய எதிரி தரப்பிற்கு வாய்ப்பளித்தும் சாட்சியை குறுக்கு விசாரணை செய்யவில்லை.

Sd/-S.Sathiya,
Judicial Magistrate No.1,
Sankari.

Sd/-Boopathy

<u>DEPOSITION OF WITNESS</u>

(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C.249/2025 | Date | : 02.02.2026 |
| Deposition of Witness for | : அ.சா.3 | Taluk | : |
| Name | : பழனியப்பன் | Calling | : |
| Father Name | : மாரிமுத்து | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 02.02.2026.

<u>(எதிரி ஆஜர்).</u>

**<u>அரசு தரப்பு முதல் விசாரணை :</u>**

1) நான் தற்போது சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், கஸ்தூரிபட்டி அஞ்சல், அன்-செட்டிபட்டியில் வசித்து லாரி ஒர்க் ஷாப்பில் வேலை செய்து வருகிறேன். கடந்த 06-10-2024 ம் தேதி, மாலை சுமார் 06.00 மணியளவில் சங்ககிரி சந்தைபேட்டையில் காய்கறி வாங்குவதற்காக சென்றேன். அப்போது, செல்லக்குமார் என்பவர் அவரது Splendor இருசக்கர வாகனம் காணாமல் போய்விட்டதாக தேடிக்கொண்டிருந்தார்.

2) அவர் என்னிடம் அவரது இருசக்கர வாகனத்தை பார்த்தீர்களா என்று கேட்டார், நான் பார்க்கவில்லை என்று கூறினேன். சுற்றும்முற்றும் தேடி பார்த்தோம். பின்னர், நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**<u>குறுக்கு விசாரணை</u>** :-

சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய எதிரி தரப்பிற்கு வாய்ப்பளித்தும் சாட்சியை குறுக்கு விசாரணை செய்யவில்லை.

Sd/-S.Sathiya,
Judicial Magistrate No.1,
Sankari.

Sd/-Palaniyappan